## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **சசிகலா (கிராம நிர்வாக அலுவலர்)** |
| Husband Name | : | **சிவா** |
| Address | : | **வேலூர், பெரம்பலூர் மாவட்டம்** |
| Age | : | 32/2025 |

**<u>தேதி : 24.03.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கிராம நிர்வாக அலுவலராக வேலூர் கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குரும்பலூர் தெற்கு மற்றும் பொம்மனப்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 08.06.2020ம் தேதி மாலை நேரம் பொம்மனப்பாடி கிராமத்தில் ் பணியில் இருந்தபோது சத்திரமனை, பொம்மனப்பாடி எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்த்துகொண்டிருந்ததாக Child Line Director முகமது உசைன் தலைமையிலான குழுவிற்கு தகவல் வந்ததன் அடிப்படையில் பெரம்பலூர் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கோட்டாச்சியர், Child Labour department. Co- Ordinator ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மேற்படி இடமானது பொம்மனப்பாடி கிராம புல எண். 152/16 கொண்ட முகமது கனி சாயுபுக்கு சொந்தமான இடமாகும்.

மேற்படி இரண்டு சிறுவர்களையும் விசாரித்தபோது சத்திரமனை கிராமத்தை சேர்ந்த கண்ணன் என்பவர் அவர்களது பெற்றோர்களுக்கு

வருடத்திற்கு ரூபாய் 60 ஆயிரம் பணம் கொடுத்து ஆடு மேய்க்கும் வேலைக்காக வாங்கியதாக விசாரணையில் தெரியவந்தது. மேற்படி சிறுவர்களை மீட்டு குழந்தை நல குழுவில் ஒப்படைத்தனர். மேற்படி சிறுவர்களிடம் வேலை வாங்கியதற்கான நடவடிக்கை எடுக்க சொல்லி உயர் அதிகாரிகள் தகவல் தெரிவித்தன் பேரில் பெரம்பலூர் காவல் நிலையத்தில் கடந்த 09.06.2020 அன்று புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் B.Sc. Zoology படித்துள்ளேன். நான் கிராம நிர்வாக அலுவலராக 6 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். நான் கொடுத்த புகார் மனுவில் எந்த ஒரு காவல் நிலையத்தையும் நான் குறிப்பிட்டு கூறவில்லை. வருவாய் வட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி நான் புகார் மனு கொடுத்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மாலை 4.00 மணி அல்லது 5.00 மணிக்கு சென்றேன். பொதுவாக அடித்தல், திருத்தல் இருந்தால் நான் மேலெழுத்து செய்வது வழக்கம். புகாரை நான் காவல் நிலையத்திற்கு நேரடியாக சென்று கொடுத்தேன். 09.06.2020 அன்று காலை 10.00 முதல் 12.00மணிக்குள் புகார் கொடுத்தேன்.

புகார் கொடுக்கும்போது என்னுடன் கிராம நிர்வாக அலுவலர் அன்புராஜா என்பவர் உடன் வந்தார். போலீஸ் விசாரணையில் அன்புராஜா உடன் வந்ததை சொல்லவில்லை என்றால் சரிதான். பெரம்பலூர் நீதிமன்றத்தில் இந்த ஒரு வழக்குதான் போட்டுள்ளேனா என்றால் இந்த வழக்கு இல்லாமல் இன்னும் 2 வழக்குகள் போட்டுள்ளேன். பொய்யான வழக்கு போடுவதே வழக்கமாக

கொண்டுள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த அன்றைய தினமே போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.